உ
சிவமயம்

# சப்த தீவுகளில்

# பஜனைப் பாத யாத்திரை

(ஆத்மஜோதி - நா. முத்தையா)

"ஆனைமுகன் ஆறுமுகன் அம்பிகை பொன்னம்பலவன்
ஞானகுரு வாணிபதம் நாடு."

கோயில் விழாக்கள் மக்கள் உள்ளத்திலே ஒருணர்வை ஏற்படுத்துகின்றன. மக்கள் ஒவ்வொருவர் உள்ளத்திலும் சிற்றுணர்வும் உண்டு; பேருணர்வும் உண்டு. சிற்றுணர்வைக் கிளர்ந்தெழச் செய்தல் மிகச் சுலபமானதாகும். பேருணர்வைக் கிளர்ந்தெழச்செய்தல் மிகக் கடினமானதாகும். ஒரு குளத்திலுள்ள நீரை அணைகட்டி வைப்பதற்கு ஆயிரக்கணக்கானோரின் ஆண்டுக் கணக்கான முயற்சி தேவை. அதை உடைத்து விடுவதற்கு ஒருவனுடைய கணப் பொழுதின் முயற்சியே போதியது.

இதே போன்று மனிதனுடைய சிற்றுணர்வைக் கணப்பொழுதிலே கிளர்ந்தெழச் செய்து விடலாம். பேருணர்வை உண்டாக்குவதற்குப் பல பிறவிகள் முயல வேண்டும். கோயில் விழாக்களிலே நடைபெறும் பொப் இசை போன்ற நிகழ்ச்சிகள் மக்களுடைய சிற்றின்ப உணர்வைத் தூண்டுவதனுல் அதனை நோக்கிப் பெருங் கூட்டம் கூடுகின்றது. பக்திப் பாடல்கள், பஜனைப் பாடல்கள் பேருணர்வை விழித்தெழச் செய்கின்றன. அவற்றை நோக்கிய கூட்டம் எப்பொழுதும் குறைவாகவே காணப்படுகின்றது.

கிராமங்களிலே கோயில் விழாக்களின் போதும், விவாகம், ருதுசாந்தி, காது குத்துதல் போன்ற மங்கலகரமான நிகழ்ச்சிகளின் போதும் ஒலி பெருக்கிகள் அலறும் சத்தங்களை இம் மக்கள் எவ்வாறு சகித்துக் கொள்கின்ருர்களோ என்று எண்ணத் தோன்றுகிறது.

பஜனை போன்ற நிகழ்ச்சிகளுக்கு விரல் விட்டு எண்ணத் தக்கவர்களே கூடுகின்ருர்கள். இதனுல் மனம் சோர்ந்து விடாமல் பஜனைகள், பக்திப் பாடல்கள் போன்றவைகளை மக்கள் மத்தியிலே பரப்ப வேண்டியது ஆஸ்திகப் பெருமக்களுடைய கடமையாகும்.

உலகம் துன்பமயமானது என்று பலர் கூறுகின்ருர்கள். அத்தகைய துன்பத்தை நீக்குவதற்கு வழி ஆண்டவனுடைய நாம அலையை உலகம் முழுவதும் நிறையச் செய்ய வேண்டும் என்று ஞானசம்பந்தப்பெருமான் கூறுகின்ருர். ''அரன்ஞமமே சூழ்க; வையகமுந் துயர் தீர்கவே'' என்பதுஅவர்கூறும்வழி.

இதனையே குறிக்கோளாகக் கொண்டு கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக, சப்த தீவுகளின் திவ்ய ஜீவன சங்கச் சமாஜம் நல்லூர்த் தேர்த் திருவிழாவை முன்னிட்டு நயினை நாகபூஷணி அம்பாள் கோயிலிலிருந்து

நல்லூர் கந்தசுவாமி கோயிலுக்குப் பஜனைப் பாத யாத்திரையை நடத்தி வருகின்றது.

பஜனைப் பாத யாத்திரை தொடங்குவதற்கு ஒரு வாரத்திற்கு முன்பே ஒவ்வொரு தீவிலும் பஜனையும் சத்சங்கமும் நடைபெற்று வருகின்றன. நெடுந்தீவு, நயினாதீவு, அனலை தீவு, புங்குடுதீவு, கரம்பன், வேலணை, காரை நகர், மண்டைதீவு ஆகிய இடங்கள் இத்தெய் வீகப் பணியில் பங்கு கொள்ளுகின்றன.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் முருகப் பெருமான். கலியுகத்தில் பாவங்களைப் போக்கவல்ல நாமம் முருக நாமம். "சுக்குக்கு மேற்பட்ட வைத்தியமும் இல்லை; சுப்பிர மணியனுக்கு மேற்பட்ட தெய்வமும்இல்லை." என்பது நமது முன்னோர் அனுபவத்தில் கண்ட பேருண்மை.

முருக நாமத்தை வீடுதோறும் பரவச் செய்தால் மக்கள் நோய் நொடியின்றிச்

சந்தோஷமாக வாழ்வார்கள். அந்த இடத்திலே அழகும், தெய்வ மணமும், இளமையும் பொங்கிப் பொலியும்; இதனை உள்ளத்திலே தெளிந்த, கொழும்பு, ஐந்தாம் குறுக்குத் தெருவைச் சேர்ந்த சிவரஞ்சனி ஸ்டோர்ஸ் ஸ்தாபகர் - உயர்திரு. க. இராமசாமிப்பிள்ளை அவர்கள் தமது ஞானத் தொண்டாக இந் நூலை வெளியிடுகின்றார்கள். அவர்கள் முருகன் திருவருள் பெற்று என்றும் இளமையோடிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான் மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்.

பன்னிரு கரத்தாய் போற்றி
பசும்பொன் மா மயிலாய்ப் போற்றி
முன்னிய கருணையாறு
முகப் பரம் பொருளே போற்றி
கன்னிய ரிருவர் நீங்காக்
கருணைவா ரிதியே போற்றி
என்னிரு கண்ணே கண்ணு
ளிருக்குமா மணியே போற்றி.

## விநாயகர் வழிபாடு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தி னிளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின் றேனே.

—திருமூலர்

## நாமாவளி

1. ஐயகணேச ஐயகணேச ஐயகணேச பாஹிமாம்
ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ஸ்ரீகணேச ரட்சமாம்
(ஐயகணேச)

2. கணநாதம் கணநாதம் ஈஸ்வர புத்ரம் கணநாதம்
விக்னவிநாயக கணநாதம் சித்திவிநாயக கணநாதம்
பார்வதிபுத்ரம் கணநாதம் முக்திப்பிரதாயக
கணநாதம்
மூஷிகவாகன கணநாதம் மோதகஹஸ்த
கணநாதம்
சாமர கர்ண கணநாதம் விளம்பிதசூஸ்திர
கணநாதம்
வாமனரூப கணநாதம் மகேஸ்வரபுத்ர கணநாதம்
(கணநாதம்)

3. சிவசிவகஜமுக கணநாதா சிவகணவந்தித குணநீதா
வாவாவாவா அங்குசபாசா வந்தருளின்பந்
தந்திடு நேசா
உமைதருபாலா குருமணியே உந்தனடைக்கலம்
அடியோமே
மகாகணபதே குருசரணம் மனம்மகிழ்ந்து வந்
தருள் சரணம்
சரணம் சரணம் தந்திமுகா சரவணபவனுக்
குயர்துணைவா (சிவசிவ)

## குருவழிபாடு

தெளிவு குருவின் திருமேனி காண்டல்
தெளிவு குருவின் திருநாமஞ் செப்பல்
தெளிவு குருவின் திருவார்த்தை கேட்டல்
தெளிவு குருஉரு சிந்தித்தல் தானே.
(திருமூலர்)

## நாமாவளி

குருநாதா குருநாதா சற்குருநாதா குருநாதா
குருநாதா குருநாதா சற்குருநாதா குருநாதா
தீனநாதா தீனபந்து திவ்யவடிவே குருநாதா

ஞானநாதா ஞானபோதா ஞானவடிவே குருநாதா
அனாதிநாதா ஆனந்தரூபா அற்புதசரித்திரா குருநாதா
(குருநாதா)

என்னை யெனக்கறிவித்தான் எங்கள் குருநாதன்
இணையடி என்தலை வைத்தான் எங்கள் குருநாதன்
அன்னைபிதாக் குருவானான் எங்கள் குருநாதன்
அவனியெலாம் ஆளவைத்தான் எங்கள் குருநாதன்
முன்னைவினை நீக்கிவிட்டான் எங்கள் குருநாதன்
மூவருக்கும் அறியவொண்ணான் எங்கள் குருநாதன்
நன்மைதீமை அறியாதான் எங்கள் குருநாதன்
நான்தானாய் விளங்குகின்றான் எங்கள் குருநாதன்
(யோகர் சுவாமிகள்)

## முருகவழிபாடு

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்க்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்க்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே!
—கந்தர் அநுபூதி.

# ஸ்ரீ செல்வ முத்துக்குமாரசுவாமி நாமாவளி

1. சரணம் சரணம் முத்தையா
   சரவண பவனே ,,
2. சரணம் சரணம் ,,
   சஞ்சலந் தீர்ப்பாய் ,,
3. சரணம் சரணம் ,,
   சங்கரன் மகனே ,,
4. சரணம் சரணம் ,,
   சௌபாக்கியம் அருள்வாய் ,,
5. சரணம் சரணம் ,,
   சக்தி அருள்வாய் ,,
6. சரணம் சரணம் ,,
   சண்முக பதயே ,,
7. சரணம் சரணம் ,,
   ஷட்கோண பதயே ,,
8. வேலூர் வளரும் ,,
   வேண்டும் அருளது ,,

9. அன்பது அருள்வாய் முத்தையா
அருளது தருவாய் ,,

10. அறிவைத் தருவாய் ,,
அமைதியை அருள்வாய் ,,

(சரணம்)

—தருமபுரம் சுவாமிநாதன்

திருவடியுந் தண்டையுஞ் சிலம்பும் சிலம்பூடுருவப்
பொருவடிவேலுங் கடம்புந் தடம்புய மாறிரண்டும்
மருவடிவான வதனங்களாறும் மலர்க்கண்களும்
குருவடிவாய் வந்தென் உள்ளங்குளிர குடிகொண்டவே.

—அலங்காரம்;

## நாமாவளி

சரவண பவனே பரதெய்வம்
தரணியி லவனே மெய்த்தெய்வம்
பக்தர்க் கிரங்கும் விசுவாசன்
பழனிப் பதிவாழ் முருகேசன்
முருகன் திருவடி தரிசனமே
முத்திக் கொருதுணை யறிமனமே

சரவண பவகுக எனவருமே
சத்திய ஞானத் திருவுளமே

பவப்பிணி ஒழித்திடும் மருந்துண்டு
பன்னிரு திருக்கரன் திருத்தொண்டு

கதிர்வடி வேலன் திருவடியே
கதிதரும் துணையதை நீபிடியே

சண்முக சுந்தர வேலவனே
சங்கரி ஈன்றருள் பாலகனே

அறுமுகன் திருவடி மலர் மறவோம்
அவனியிலே இனிநாம் பிறவோம்

கந்தனை அன்பினைச் செய்யுங்கள்
சிந்தனை அவனடி வையுங்கள்

வேலாயுதனை வேண்டுங்கள்
வெய்ய பிறவியைத் தாண்டுங்கள்

(சரவண)

-திருப்புகழ்மணி

குகனே வருக களங்கமிலா கோனே வருக
கனன்மிடற்றோன்
மகனே வருக மணம் பூத்த மலரே வருக ஓராறு
முகனே வருக சிவானந்த முதலே வருக அடியாரின்
அகனே வருக பழனிமலை அரசே வருக வருகவே
— அகஸ்தியர்

## நாமாவளி

### பல்லவி

வேல் முருகா மால் மருகா வா வா சண்முகா
கால் பிடித்தேன் காத்தருள வா வா சண்முகா

### அநுபல்லவி

நால்வேதப் பொருளான நாதா சண்முகா
நல்லதெல்லாம் உன்பால் கொண்டாய் நாதா
சண்முகா
செல்லமாகச் சிலை அணைக்கும் சேயே சண்முகா
செங்கதிர் வேல் தாங்கிய என்தேவா சண்முகா (வேல்)

சரணம்

ஆறுபடை வீடுடைய ஆண்டவா சண்முகா
ஆனந்தமே அற்புதமே ஆண்டவா சண்முகா
தேறுதலை தருபவனே தேவா சண்முகா
சிங்கார ஓங்கார சீலனே சண்முகா (வேல்)

நாறுமாலை அணிமார்பா நாயகா சண்முகா
நாதவிந்து கலாதீத நாயகா சண்முகா
ஏறும்மயில் வாகனனே ஏந்தலே சண்முகா
நீறணிந்தார் வினைபோக்கும் நீதனே சண்முகா (வேல்)

வீடும் நாடும் நின்திருத்தாள் வேண்டினேன் சண்முகா
வீரன் சூரன் உடல் கிழித்த வேலனே சண்முகா
ஓடும் மனம் உன்னை நாட ஆடி வா சண்முகா
ஒருவனேஎன் வினைஅளித்த உத்தமா சண்முகா (வேல்)

எல்லையிலா ஆனந்தனே ஏகாந்தா சண்முகா
எங்கும் நிறைந்த அன்புருவே ஏ முருகா சண்முகா
தில்லையிலே ஆடுந் தேவிபாலகா சண்முகா
திருட்டுத்தனமாய்க் குறக்கொடியைக் கொண்டவா
சண்முகா (வேல்)

தொல்லையெலாங் கடந்தபாதந் தந்திடாய் சண்முகா
தோத்தரித்தோம் எங்கள்முன்னே வந்திடாய் சண்முகா
கல்லையொத்த மனமுருகக் கருணைசெய் சண்முகா
கல்லெனச் சிலம்பொலிக்க ஓடிவா சண்முகா (வேல்)
(—பித்துக்குளி முருகதாஸ்)

தொல்லைக் குடும்பத் துயரதனில்
தொலைத்தேன் அந்தோ காலமெல்லாம்
அல்லல் அகற்றிப் பெரியோரை
அடுத்தும் அறியேன் அரும்பாவி
செல்லத் தணிகைத் திருமலைவாழ்
தேவா உன்றன் சந்நிதிக்கு
வில்வக்குடலை எடுக்காமல்
வீணுக் குடலை எடுத்தேனே.

அரஹரோ ஹரா

அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
அரஹரோ ஹரா சுவாமி அரஹரோ ஹரா
கதிர்காம வேலனுக்கு அரஹரோ ஹரா
கந்தப்ப சுவாமிக்கு ,, ,,
திருப்பரங்கிரி தீரனுக்கு ,, ,,

| | | |
|---|---|---|
| திருச்செந்தூர்த் தேவனுக்கு | அரஹரோ | ஹரா |
| திருப்பழனிச் செல்வனுக்கு | ,, | ,, |
| திருவேரக பாலனுக்கு | ,, | ,, |
| குன்றிலாடும் குமரனுக்கு | ,, | ,, |
| குஞ்சரிதன் கணவனுக்கு | ,, | ,, |
| குறவள்ளி காந்தனுக்கு | ,, | ,, |
| குணங்கடந்த லோலனுக்கு | ,, | ,, |
| சோலைமலைக் கிழவனுக்கு | ,, | ,, |
| சொகுசுக்கார முருகனுக்கு | ,, | ,, |
| சிவசக்தி வடிவனுக்கு | ,, | ,, |
| சிங்கார வேலனுக்கு | ,, | ,, |
| அகங்கார நாசருக்கு | ,, | ,, |
| அன்பர்களின் நேயருக்கு | ,, | ,, |
| ஓங்காரத் தத்துவர்க்கு | ,, | ,, |
| ஓம்சக்தி தந்தவர்க்கு | ,, | ,, |

(அரஹரோஹரா)

## பிள்ளைத் தமிழ்

கண்ணால் உனது திருவடியைக்
கண்டா தரவு பெருகியிரு
கையால் தொழுதுன் திருக்கோயில்
காலால் வலஞ்செய் துனதுபுகழ்

பண்ணால் உருகிப் புகழ்ந்து கண்ணீர்
பாயா எனையும் தாயாகப்
பரிந்து வளர்க்கும் பெருங்கருணை
படைத்து விரிஞ்சைப் பதிவாழும்
அண்ணால் வருக உலகமுழு
தாண்டாய் வருக கதிதருமெம்
ஐயா வருக ஆறுமுக
அப்பா வருக விளங்குகதிர்
வண்ணா வருக மயிலேறு
மன்னா வருக அடியார்கள்
வாழ்வே வருக தெய்வசிகா
மணியே வருக வருகவே!

## ஓம் முருகா ஓம்

| | |
|---|---|
| பரமஞான குருபரா | ஓம் முருகா ஓம் |
| பக்தரின் இரட்சகா | ,, |
| சரவண பவகுகா | ,, |
| தத்வ ஞானவித்தகா | ,, |
| அரிமருக ஷண்முகா | ,, |
| அடியவர்க் கெளியவா | ,, |
| தருணமா மழைபெண | ,, |
| சஞ்சலந் தவிர்க்கவா | ,, |

எதிரிலாத தலைவனே ஓம் முருகா ஓம்
இணையிலாத அழகனே ,,
அதிரும் வேற் கரத்தனே ,,
ஆறுமா முகத்தனே ,,
முதிரு ஞானக் கிழவனே ,,
முருகனென்னும் இளைஞனே ,,
உதய ஞாயி றெப்பவே ,,
ஓடியென்முன் ஆடிவா ,,

கற்பனை கடந்தவா ஓம் முருகா ஓம்
காந்த சக்தி வாய்ந்தவா ,,
வெற்பினைத் தகர்த்தவா ,,
வேங்கையாய் முளைத்தவா ,,
அற்புதம் மிகுந்தவா ,,
அன்பர்நெஞ் சமர்ந்தவா ,,
சொற்பனத்தி லாயினும் ,,
தோன்றியின்பம் ஏந்திவா ,,

# முருக நாமாவளி

சரவணபவ சரவணபவ சரவணபவ பாஹிமாம்
சுப்ரமண்ய சுப்ரமண்ய சுப்ரமண்ய ரக்ஷமாம்

வேல்முருகா வேல்முருகா வேல்முருகா நம்ஹஓம்
வேலாயுதா வேலாயுதா வேலாயுதா சரணம்ஓம்

ஓம்முருகா ஓம்முருகா ஓம்முருகா ஓம்
ஓம்முருகா ஓம்முருகா ஓம்முருகா ஓம்
முருகா முருகா முருகா முருகா
முருகா முருகா திருமால் மருகா
திருமால் மருகா வடிவேல் அழகா
வடிவேல் அழகா வள்ளியின் கணவா
வள்ளியின் கணவா வன்னமயில் வாகா
வன்னமயில் வாகா வடிவேல் முருகா
வடிவேல் முருகா வந்தெனை யாள்வாய்
வந்தெனை யாள்வாய் வேல்வேல் முருகா
வேல்வேல் முருகா வெற்றிவேல் முருகா
வெற்றிவேல் முருகா ஞானவேல் முருகா
ஞானவேல் முருகா சக்திவேல் முருகா
ஐயா முருகா அரகர முருகா
அரகர முருகா சிவசிவ முருகா
சிவசிவ முருகா ஜயசிவ முருகா

## எங்கள் குலதெய்வம்

குமரமலை வீற்றிருக்கும் எங்கள் குல தெய்வம்
குஞ்சரியை மணம் புரிந்த எங்கள் குல தெய்வம்
சமரசத்தை நிலைநிறுத்தும் ,, ,, ,,
ஷண்முகமாய் அவதரித்த ,, ,, ,,
தண்டாயுதம் தரித்த ,, ,, ,,
தண்டபாணி பேருடைய ,, ,, ,,
ஆறுமுகம் படைத்த ,, ,, ,,
ஆறுபடை வீடுடைய ,, ,, ,,
சிவனுருக்கு உபதேசித்த ,, ,, ,,
சுப்ரமண்ய பேருடைய ,, ,, ,,
பண்டாரம் போலிருக்கும் ,, ,, ,,
பழனிமலை வீற்றிருக்கும் ,, ,, ,,

## முருகப் பெருமானே

அன்பரகம் வாழ்பவனே முருகப் பெருமானே
ஆணவத்தைக் காய்பவனே ,, ,,
இன்பவள்ளி நாயகனே ,, ,,
ஈகைபன்னி ரண்டுடையாய் ,, ,,
உண்மையறி வின்பமய ,, ,,

| | | |
|---|---|---|
| ஊக்கமுடையார்க் கருளும் | முருகப் | பெருமானே |
| எண்ணத்தில் இனிப்பவனே | ,, | ,, |
| ஏறுமயில் வாகனனே | ,, | ,, |
| ஐயமெல்லாம் தீர்ப்பவனே | ,, | ,, |
| ஒளிமிக்க வேலவனே | ,, | ,, |
| ஓங்கார வித்தகனே | ,, | ,, |
| ஔடதமாய் நோய் தீர்ப்பாய் | ,, | ,, |
| கலியுக வரதனெனும் | முருகப் | பெருமானே |
| கங்காத ரன்மகனே | ,, | ,, |
| சதுர்மறை வாசகனே | ,, | ,, |
| சஞ்சலந் தீர்ப்பவனே | ,, | ,, |
| இடம்பம் கடந்தொளிரும் | முருகப் | பெருமானே |
| இணக்கம் அறிந்திணங்கும் | ,, | ,, |
| தமிழர் குலதெய்வமாம் | ,, | ,, |
| நமனும் நடுங்கிடும் வேல் | ,, | ,, |
| பரமக்ரு பாகரனே | ,, | ,, |
| மரணபய மொழிக்கும் | ,, | ,, |
| இயற்கை எழில்படைத்த | ,, | ,, |
| இரவுபகல் கடந்த | ,, | ,, |
| அலங்கிருதப் பிரியனெனும் | ,, | ,, |
| வளங்கொள் தமிழ்வளர்க்கும் | ,, | ,, |
| அழகுமணங் கமழும் | ,, | ,, |
| அறத்தின் படைத்தலைவ | ,, | ,, |
| அன்பறி வாற்றல் அருள் | ,, | ,, |

## ஞானக் கதிர்வேல்

வீர பராசக்தி வேல் வேல் — ஞான
வித்தகர் கண்டபொற் சித்திர வேல் வேல்
சூரைப் பிளந்த சுடர்வேல் — அருட்
சோதியாய் எங்கும் துலங்கும் புகழ் வேல்! —வீர

மாமயி லேறும் மணிவேல் — குற
வள்ளி தெய்வானையைப் புல்லும் கனிவேல்
பாமலர்க் கிச்சைப் படும்வேல் — சிவ
பார்வதி பெற்ற பதுமச் சுடர்வேல் —வீர

கொஞ்சும் குழந்தை வடிவேல் — தீயர்
கொட்ட மடக்கக் கொதிக்கும் தழல்வேல்
தஞ்சருக் கஞ்சல் தரும்வேல் — ஆத்ம
தாகம் தணித்திடும் தியாகப் புனல் வேல் —வீர

அச்சம் அகற்றும் அயில் வேல் — பர
மானந்த வெள்ளத் தழுத்தும் அருள் வேல்
முச்சுட ராகப் பொலிவேல் — ஆழ்ந்த
மூலத்திற் பொங்கி முழங்கும் கனல் வேல் —வீர

ஆறுமுகம் கொண்ட சீர்வேல் — வஞ்சர்க்
கஞ்சு முகந்தந்து துஞ்சிக்கும் கூர்வேல்
ஏறுநடை கொண்ட போர்வேல் — தெய்வம்
இல்லையென் பாருள்ளும் துள்ளும் உயிர்வேல்-வீர

## அருள் படைத்த வேலவா

அருள் படைத்த வேலவா வா வா வா
அம்மை கௌரி பாலகா வா வா வா
பொருள் படைத்த ஞானியே ,,
புகழ் படைத்த மேனியாய் ,,
தெருள் படைத்த பாவலா ,,
திறமை கொண்ட காவலா ,,
இருள் துடைத்தெம் நெஞ்செலாம் ஒளிமேவ
எழில் படைத்த மயில்மிசை வா வா வா
அன்புமிக்க நண்பன்நீ வா வா வா
எம்மை யாளும் அரசுநீ ,,
இனிமை நல்கும் மழலைநீ ,,
உண்மையான செல்வம்நீ ,,
ஓங்குயிர்க் குயிரும் நீ ,,
செம்மையான பொலிவுடன் மயில்மீதென்
சிந்தையில் நடஞ்செய வா வா வா

—பரஹம்சதாசன்.

## கந்தபுராணம்

மூவிரு முகங்கள் போற்றி முகம்பொழி கருணைபோற்றி
ஏவரும் துதிக்க நின்ற ஈராறு தோள்போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள் மலரடி போற்றி அன்னான்
சேவலும் மயிலும் போற்றி திருக்கைவேல்
போற்றி போற்றி.

ஆறிரு தடந்தோள் வாழ்க அறுமுகம் வாழ்க
வெற்பைக்

கூறுசெய் தனிவேல் வாழ்க குக்குடம் வாழ்க
செவ்வேள்

ஏறியமஞ்ஞை வாழ்க! யானைதன் அணங்கும் வாழ்க
மாறிலா வள்ளி வாழ்க வாழ்க சீர் அடியார் எல்லாம்.

## திருப்புகழ்

இறவாமல் பிறவாமல் எனையாள் சற்குருவாகி
பிறவாகித் திறமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனே சொற்குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

சந்ததம் பந்தத் தொடராலே
சஞ்சலம் துஞ்சித் திரியாதே
கந்தனன் றென்றுற் றுனைநாளும்
கண்டு கொண்டன்புற் றிடுவேனோ
தந்தியின் கொம்பைப் புணர்வோனே
சங்கரன் பங்கிற் சிவைபாலா
செந்திலங் கண்டிக் கதிர்வேலா
தென்பரங் குன்றிற் பெருமாளே.

எதிரி லாத பத்தி தனைமேவி
இனிய தாணினைப்பை இருபோதும்
இதய வாரிதிக்கு ளுறவாகி
எனதுளே சிறக்க அருள்வாயே
கதிரகாம வெற்பி லுறைவோனே
கனக மேருவொத்த புயவீரா
மதுர வாணியுற்ற கழலோனே
வழுதி கூனிமிர்த்த பெருமானே!

## முருகன் அர்ச்சனை மாலை

(கவியோகி சுத்தானந்த பாரதியார்)

ஓம்சிவக் கனலே, ஓம்சுத்த ஜோதி,
ஓம்சண்முகனே, சரவண பவனே,
சுரர்படைத் தலைவா, சுப்ரம் மண்யா,
மந்திர வடிவே வந்தனம் வந்தனம்!
அருளே யான பொருளே போற்றி!
அன்பே யான நண்பா போற்றி!
இருளிடர் போக்கும் இரவியே போற்றி!
கந்தா போற்றி, கடம்பா போற்றி!
சேந்தா, குறிஞ்சி வேந்தா போற்றி!
வேலா, தானவர் காலா போற்றி!

சூரனைக் கொன்ற வீரனே போற்றி!
குன்றைப் பிளந்த குமரா போற்றி!
குகனே உமையாள் மகனே போற்றி!
இதயக் குகையின் கதிர்மணி போற்றி!

ஓங்கா ரத்துள் ஒலியே போற்றி!
நீங்கா துள்ளே நிறைவாய் போற்றி!
புலவா, ஞானப் பொலிவே போற்றி!
சங்க மிருந்த தமிழா போற்றி!
முருகா, திருமால் மருகா போற்றி!
ஐயா, பன்னிரு கையா போற்றி!

அடியார் துயரங் கடிவாய் போற்றி!
கருத்தி லினிக்குங் கரும்பே போற்றி!
அழகா போற்றி, குழகா போற்றி!
வள்ளி யுடனே வடிவேல் பிடித்து,
மயில்மே லேறி வருவாய் போற்றி!
செஞ்சுடர் மேனிச் செவ்வேள் போற்றி!
அருட்பெருஞ் சக்தி ஆண்டவா போற்றி!
நானெனும் அறிவே யானாய் போற்றி!
அன்பருக் கபயம் அளிப்பாய் போற்றி!
துன்பந் துடைக்கும் துரையே போற்றி!

இன்பம் அளிக்கும் இறைவா போற்றி!
சிந்தைக் கினிய தேவா போற்றி!
கருத்தைக் கடந்த கடவுளே போற்றி!
கனியினுங் கரும்பினும் இனியாய் போற்றி!
மலரில் மணமாய் மணப்பாய் போற்றி!
சோதியில் விளைந்த சுடரே போற்றி!
வெய்ய பகைவரை நொய்யப் புடைத்து
களத்தில் வெற்றி காட்டுவாய் போற்றி!
ஆணவச் செருக்கை நாணப் புடைத்து
நிருதர் குருதியில் நீந்துவாய் போற்றி

மரண பயத்தை மாய்ப்பாய் போற்றி!
விதியை வெல்லும் மதியே போற்றி!
வீரருக் காண்மை விளைப்பாய் போற்றி!
அடிமைத் தளைகளை அறுப்பாய் போற்றி;
மடமை யிருளை மாற்றுவாய் போற்றி!
வறுமைத் துயர்க்கு மருந்தே போற்றி!

வண்மையும் வளமையும் வளர்ப்பாய் போற்றி!
ஆறுத லளிக்கும் அப்பனே போற்றி!
தீனர்க் குதவும் தெய்வமே போற்றி!
தேனே ஞானத் தெளிவே போற்றி!

இரவிபோல் என்னுள் எழுவாய் போற்றி!
ஆரு தாரமும் அமைய மலர்ந்தே
ஏழில் ஏறி இலகுவாய் போற்றி!
சகசிரா ரத்தில் விகசித் தொளிரும்
அறுமுகச் சுடரே அறிவிற் கறிவே!
சக்திவேல் பிடித்த பக்தர் காவலா
கவலை போக்குங் கனிந்த முகமும்
கருணை நிரம்பிய கமலக் கண்ணும்
அறிவொளி வீசும் அமைதிப் பார்வையும்
பவளச் செவ்வாய் பளிச்சிடத் தோன்றியென்

இன்னலைத் துடைக்கும் எழிலார் நகையும்
மலைபோ லுயர்ந்த மாண்புறு தோளும்

குன்றைத் தகர்க்குங் கொழும்புய வலிவும்
வரங்களை வாரி வழங்குங் கையும்
அச்சம் ஒழிக்கும் அபயக் கரமும்
மனோகர மான மழவிழந் திருவும்
காதலைத் தூண்டுங் கண்மணி அழகும்
இராப்பக லில்லா இடத்தினில் என்னைக்
கூடிக் குழைந்து குலாவிடும் அன்பும்
இச்சையுங் கிரியையும் இருமருங் கிருக்கப்

பச்சை மயில்மேல் பவனி வந்து
துட்டரை வீழ்த்தித் தொண்டரை வாழ்த்தும்
மறமயக் கருணையும், அறமயக் கருணையும்
கொண்டெப் போதுங் கண்டுநான் களிக்க
நினைத்ததும் எதிரே நிற்பாய் போற்றி!
அன்னே என்றன் அப்பா போற்றி!
குமரா பரம குருவே போற்றி!
மனமணி யான தினமணி போற்றி!

துன்பக் கடலில் துடிக்கும் என்னைத்
தூக்கிவிட் டுனக்காள் ஆக்குவாய் போற்றி!

காமச்சேற்றில் கலங்குமென்னைக்
கைதந் துண்மை காட்டுவாய் போற்றி!
இருமன விகாரத் திடர்ப்படு மெனக்குன்
ஒருமன நேயந் தருவாய் போற்றி!
கடுஞ்சின வேங்கை கவ்விய என்னை
விடுவித் தமைதி விளைப்பாய் போற்றி!
பொறுமையைச் சீறும் பொருமைப் படையை
வராது துரத்த வருவாய் போற்றி!
அருட்பணிக் காற்றல் அளிப்பாய் போற்றி!
பொய்ம்மயக் கொழித்து மெய்ப்பொரு
ளுணர்த்த

மோனசஞ் சீவி யானவா போற்றி!
மருட்டும் பிறவி மயற்பிணி மாற
மலைமருந் தாக வருவாய் போற்றி!

சாகா வாழ்வும் வேகா உடலும்
மும்மல மில்லா நின்மல மனமும்
அண்டினார்க் குதவும் பண்டிதா போற்றி!
சொல்லா தறிய வல்லாய் போற்றி!
பிள்ளைபோ லென்னைப் பேணுவாய் போற்றி!
புல்லரை விலகிச் செல்வாய் போற்றி!
பொய்யா நெஞ்சிற் புகுவாய் போற்றி!

எல்லாம் வல்ல செல்வா போற்றி!
மங்கல மான மனைமக் களுடன்
சீருஞ் சிறப்பும் பேரும் விளங்க
வாழ்வாங்கு வாழும் வகையளி போற்றி!
நாட்டைக் கவரும் பாட்டெனக் களிப்பாய்
உலகை யாளும் பலமெனக் கீவாய்!
கண்வலை வீசும் பெண்வலைப் படாது
பொன்வலைப் படாதுன் போத நிறைவாய்!
புலனை யடக்கிப் புத்தியை உனது
நல்லருள் வழியே செல்ல விடுத்து

சாதுக் களுடனே சாதனஞ் செய்து
சித்தம் நிலைத்துச் சிவசண் முகாய
நமமென மந்திரம் நவின்றுள் ளடங்கிச்
சமாதி யோகம் சகசமாய்க் கூடி
சுத்த சமத்துவ முத்திபெற் றென்றும்
உன்னுடன் நானாய் என்னுடன் நீயாய்
இரண்டறக் கலந்தே இன்புற அருளாய்
சதாசிவக் கதிரோய் சரணஞ் சரணம்
சத்தியே சோதியே சரணம் சரணம்
குகனே அகநா டகனே சரணம்
முருகா ஓம் அறுமுக ஓம் சரணம்! 120